இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி


Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 125 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 29 – திங்கள்கிழமை 15 டிசம்பர் 2025 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 125 : Thiruvalluvar Year - 2056 - Karthigai 29 - Monday 15 December 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.12.2025) முகாம் அலுவலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாகு, காலநிலை மாற்றம் தொடர்பான செயல்பாடுகளில் உலக அளவில் தமிழ்நாடு சிறப்பான இடத்தைப் பெற ஆர்வத்துடன் உழைத்தமைக்காக UNEP அமைப்பின் Champions Of The Earth விருதினை பெற்றுள்ளதை யொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், திருமதி. துர்கா ஸ்டாலின் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.12.2025) சென்னையில் நடைபெற்ற ஒன்றிய முன்னாள் இரயில்வே துறை இணை அமைச்சர் ஏ.கே.மூர்த்தி அவர்களின் மகன் ஏ.கே.விஜய்மகேஷ் – எம்.நிவேதா ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## பெரு மாநிலங்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி

# பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

சென்னை, டிச.15-

**“பெரு மாநிலங்களையெல்லாம் பின்னுக்குத் தள்ளி பொருளாதார வளர்ச்சியில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளப் பதிவில் பெருமிதத்துடன் கூறியுள்ளார்.**

திராவிட மாடல் ஆட்சியில், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 2021-22 நிதியாண்டில் ரூ.20.72 லட்சம் கோடி ஆக இருந்தது, அது 2024-25 நிதியாண்டில் ரூ.31.16 லட்சம் கோடி ஆக உயர்ந்துள்ளது. அதாவது 50% அபார வளர்ச்சியை 4 ஆண்டுகளில் எட்டியுள்ளது.

தனிநபர் வருமானம் 2021-22 நிதியாண்டில் ரூ.2,42,339 ஆக இருந்தது, அது 2024-25 நிதியாண்டில் ரூ.3,61,619 ஆக உயர்ந்துள்ளது. அதாவது 49% அபார வளர்ச்சியை 4 ஆண்டுகளில் எட்டியுள்ளது.

### இந்தியாவிற்கே வழிகாட்டும் திராவிட மாடல் பொருளாதாரம்!

திராவிட மாடல் ஆட்சியின், மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) மற்றும் தனிநபர் வருமானம் ஆகியவை அபார வளர்ச்சியை எட்டியுள்ளது. மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) வளர்ச்சி: 2021-22 முதல் 2024-25 வரையிலான காலத்தில் 50% வளர்ச்சி அடைந்துள்ளது. தனிநபர் வருமானம் (Per Capita Growth) வளர்ச்சி: இதே காலகட்டத்தில் 49% வளர்ச்சி அடைந்துள்ளது.

கடந்த நிதியாண்டைக் காட்டிலும் 15.98% வளர்ச்சியை அடைந்துள்ளது. மேலும் இந்தியாவிலே இதுவரை எந்த மாநிலமும் இந்த வளர்ச்சியை எட்டவில்லை என்பதும் முதல்



முறையாக தமிழ்நாடு மட்டுமே இந்த நிலையை எட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாட்டின் இந்த அபரிமித பொருளாதார வளர்ச்சி, மத்திய அரசுத் தரவுகள் மூலமே தெரியவரும் இனிய வேளையில், அதனையொட்டி கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**வானுயர் GSDP வளர்ச்சி விகிதம்; பெரு மாநிலங்களை எல்லாம் பின்னுக்குத் தள்ளிய தமிழ்நாட்டின் சாதனை!**

**பரப்பளவில் பெரிய மாநிலம் இல்லை, மக்கள் தொகையிலும் பெரிய மாநிலம் இல்லை, ஒன்றிய அரசின் ஆதரவு பெருமளவில் இல்லை! இருந்தும் GSDP வளர்ச்சியில் 16%உடன் தமிழ்நாடு நம்பர் ஒன் என்றால் அதுதான் திராவிட மாடல்.**

**கடந்த மூன்றாண்டுகளில் நிலையான, அதே வேளையில் மிக அதிகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது தமிழ்நாடுதான்! சொல்வது நாம் அல்ல, இந்திய ரிசர்வ் வங்கி!**




**2021-2025 வரையிலான நிதியாண்டுகளில் மட்டுமே 10.5 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது தமிழ்நாட்டின் பொருளாதாரம்! மொத்த மதிப்பு ரூ.31.19 லட்சம் கோடி!**




### தனி நபர் வருமான உயர்விலும் வெற்றி!

**நம்மோடு ஒப்பிடத்தக்க, வளர்ந்த பெரிய மாநிலங்களான, மகாராஷ்ட்டிரா, கர்நாடகம், குஜராத் போன்றவற்றை விஞ்சிய இந்த வளர்ச்சி விகிதம் - தமிழ்நாட்டுக்கே சொந்தம்!**

**தனிநபர் வருமான உயர்விலும் தொடர்கிறது தமிழ்நாட்டின் வெற்றி!**

**2031ஆம் ஆண்டு திராவிட மாடல் 2.0 நிறைவுறும்போது, இந்தியாவில் தமிழ்நாடு முதலிடத்தில் இல்லாத துறையே இல்லை என்ற நிலையை உருவாக்கிக் காட்டுவேன்! இது உறுதி!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

---

# திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தவறான தகவலைக் கூறிய பா.ஜ.க. எம்.பி.!

## தமிழ்ப் பேராசிரியர்கள் கண்டனம்!

சென்னை, டிச. 15 -

திருப்பரங்குன்றம் விவகாரத்தில் தவறான தகவலை கூறிய பா.ஜ.க. எம்.பி.யின் அனுராக் தாக்கூரின் பேச்சுக்கு பக்தர்கள், தமிழ்ப் பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

திருப்பரங்குன்றம் வழக்கில் நீதிபதி ஜி.ஆர். சுவாமி நாதன் வழங்கிய தீர்ப்பு சமூக பாதுகாப்பை சீர்குலைப்பதாக உள்ளதாக கடும் விமர்சனம் எழுந்தது. இதையடுத்து, தமிழ்நாடு முழுவதும் நீதிபதிக்கு எதிராகவும், அவரை பதவிநீக்கம் செய்ய வலியுறுத்தியும் போராட்டங்கள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், தொடர்ந்து சர்ச்சைக்குரிய தீர்ப்புகளை வெளியிட்டு வரும் உயர்நீதிமன்ற நீதிபதி ஜி.ஆர். சுவாமி நாதனை பணிநீக்கம் செய்ய வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் இந்தியா கூட்டணி கட்சிகள் இம்பீச்மெண்ட் நோட்டீஸ் வழங்கியுள்ளன. இந்த விவகாரம் தொடர்பாக, நாடாளுமன்றத்தில் பேசிய பா.ஜ.க. எம்.பி. அனுராக் தாகூர், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் இந்துக்கள் மீது தடியடி நடத்தப்பட்டதாக தவறான தகவலை கூறினார். இந்நிலையில், பா.ஜ.க. எம்.பி.யின் தவறான கருத்துக்கு தமிழ்ப் பேராசிரியர்கள், பக்தர்கள் உள்ளிட்டோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

---

## பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று

# சார்பதிவாளர் அலுவலகங்களில் கூடுதல் முன்பதிவு வில்லைகள்!

## பதிவுத்துறைத் தலைவர் அறிவிப்பு!

சென்னை, டிச. 15-

சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

தற்போது கார்த்திகை மாதத்தில் வரும் கடைசி சுபமுகூர்த்த தினமான இன்று (15.12.2025) கூடுதலாக முன்பதிவு வில்லைகள் ஒதுக்கீடு செய்யுமாறு பல்வேறு தரப்பு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, கார்த்திகை மாதத்தில் வரும் கடைசி சுபமுகூர்த்த தினமான இன்று (15.12.2025) ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு வில்லைகளும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு வில்லைகளும், அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு வில்லைகளோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு வில்லைகளுடன் கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு வில்லைகளும் பொதுமக்களின் கோரிக்கையினை ஏற்று உத்தரவிடப்பட்டுள்ளது என்று பதிவுத்துறைத் தலைவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.